சீராகவும் மெயின்டேய்ன் பண்ணுவதன் மூலம் ஓர்க்ஷாப்பிலே வேலை செய்கின்ற பணியாளர்களின் எண்ணிக்கையினை அதிகப் படுத்தி பேருந்துகளைச் சீர்படுத்தி நல்ல முறையிலே இயக்கு வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? கட்டணத்தை உயர்த்தாமல் இருப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, இருக்கின்ற பல்வேறு நிலைமைகளை விளக்கி ஒவ்வொரு பகுதியிலிருந்தும் அரசாங்கத்திற்கு எழுதி இருக் கிறார்கள். அதன்மீது முடிவு எடுக்கவேண்டியது அரசினுடைய கடமை. எனவே அதுபற்றி பரிசீலனையில் இருக்கின்றபோது உடனே அதற்கு நான் பதில் சொல்ல முடியாது. நிர்வாகத்தை இன்னும் சீர்படுத்தவேண்டும் என்பதில் எங்களுக்கு மிகுந்த ஆர்வம் இருக்கின்றது. இன்று மற்ற இடங்களை விட நிர்வாகம் நல்ல முறையில் இங்கே இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

பொள்ளாச்சியில் வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 96—திரு. எம். பி. இரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் வாகனங்களுக்கு வேகக்கட்டுப்பாட்டு (டாகாமீட்டர்) கருவியைத் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில் எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ)&(ஆ) பொள்ளாச்சியில் உள்ள சேரன் பொறியியல் கழகத்தின் தொழிற்கூடத்திலேயே வேகக் கட்டுப்பாட்டுக் கருவி தயாரிக்கப்படுகிறது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒதுக்கப்பட்ட முதலீடு ஏதாவது இருக் கின்றதா? வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகளைப் பொறுத்த வரையிலே ஆண்டு உற்பத்தித் திறன் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்ளே, இதற்கென்று போக்குவரத்துக் கழகங்களிளே பொறுப்பு ஏற்கின்ற காரணத் தால் தனியாக அரசு பணம் ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை. மேலும் ஆண்டுக்கு எவ்வளவு உற்பத்தி என்று கணக்கிடப்படுவ தில்லை. எவ்வளவு தேவை என்று ஆர்டர்கள் கொடுக்கிறார் களோ அதற்கேற்ப உற்பத்தியினை அவர்கள் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, டாக்கா மீட்டர் என்பது அரசு ஒரு ஆணையினைப் பிறப்பித்து அதன்படி அந்த வேகக்கட்டுப்பாட்டுக் கருவியிலே பொருத்தப்பட்டிருக்கும். இன்றைக்கு அது நீக்கப்பட்டிருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைத் தயாரிக்கும் தொழிற்கூடம் பற்றியது இந்த கேள்வி. எனவே மீட்டர் பொருத்துவது பற்றிக் கேட்காதீர்கள்.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, அந்த அளவுக்கு இப்போது அந்தக் கருவி தேவையில்லை என்ற கருத்து இருக்கின்றபோது அதைத் தயாரிக்கும் தொழிற்சாலையினை ஏற்படுத்துவது இலாபகரமாக இருக்குமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை இதற்காக ஒரு பெரிய முதலீடு போட்டு தனியாகத் தொழிற்சாலை ஆரம்பிக்கவில்லை. இன்று இருப்பதை வைத்துக்கொண்டுதான் தயாரித்து வருகிறார்கள். எனவே இதற்கென்று ஒரு புதிய முதலீடு இல்லை, எனவே இலாப நஷ்டம் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை.

போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள வேகக் கட்டுப்பாட்டுக் கருவிகள்

*வினா எண் 97—திரு. பெ. சு. திருவேங்கடம்: திரு. ரா. கிருஷ்ணன்: திரு கே. நாராயணசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்து கார்ப்பரேஷன்களின் பேருந்துகளில் வேகக்கட்டுப்பாட்டுக் கருவி எத்தனை வண்டிகளுக்குப் பொருத்தப்பட்டுள்ளன?

(ஆ) வேகக்கட்டுப்பாட்டுக் கருவிகள் பொருத்தப்பட்ட பின் விபத்துகள் குறைந்துள்ளனவா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 6,584 பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ளன.

(ஆ) ஆம் ஓரளவு குறைந்துள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஸ்பீடோ மீட்டர் பொருத்தப்பட்டதற்குப் பிறகு விபத்துக்கள் ஓரளவுக்கு குறைந்துள்ளதாக அமைச்சர் அவர்கள்